# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:102:2023 நாள்: 07.01.2023

அன்பார்ந்த தோழர்களே,

## நகை மதிப்பீட்டாளர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கடந்த பல ஆண்டுகளாக நகை மதிப்பீட்டாளர்கள் நமது சங்கத்தின் அடிப்படை உறுப்பினர்களாக உள்ளனர். கார்ப்பொரேஷன் வங்கியும், ஆந்திரா வங்கியும் நமது வங்கியுடன் இணைந்தபின், அந்த வங்கிகளில் பணியாற்றி வந்த நகை மதிப்பீட்டாளர்கள் நமது சங்கத்தில் இணைந்து வருகின்றனர்.

சமீப காலமாக, புதிய தொழில் நுட்பத்துடன் போலி நகைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக, பல நகை மதிப்பீட்டாளர்கள் பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றனர். இதனால் வங்கிக்கும் அவப்பெயர் ஏற்படுகிறது. அதன் காரணமாக, நகை மதிப்பீட்டாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்க முடிவுசெய்யப்பட்டு, முதற்கட்டமாக திருச்சி, மதுரை, சேலம், கோவை, திருப்பூர் ஆகிய பிராந்தியங்களில் பணியாற்றும் நமது சங்கத்தில் உறுப்பினர்களாகவுள்ள நகை மதிப்பீட்டாளர் தோழர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி **தமிழரசு நகைத் தொழில் நுட்ப பயிற்சி மையத்தால்** கீழ்க்கண்டபடி வழங்கப்படவுள்ளது:

**இடம் : திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம், 1/A, மேலரண் சாலை, திருச்சி - 620 008**
**நாள் : 12.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை**

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் தோழர்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, சங்க அலுவலகத்திற்கு அனுப்பவும். அல்லது அதனை படியெடுத்து (scanned copy) ubeutn@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

பயிற்சி நாள் அன்று மதிய உணவும், காலை, மாலை தேநீரும் சங்கத்தால் வழங்கப்படும்.

மேலும் விவரங்கள் தேவைப்படுவோர் சங்கத்தின் செயலாளர் தோழர்.S.பொன்னம்பலம் அவர்களை அணுகவும். அவரது அலைபேசி எண்: **9940215864.**

தோழமை வாழ்த்துகளுடன்,

அ.சிதம்பரம்

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்